SRI K. SATTANATHA KARAYALAR: May I know the method and manner in which the particular post was filled? Was it advertised, were applications called for and how exactly was the post filled up?

THE HON. SRI C. SUBRAMANIAM: He was already working in the department and he was found to possess all the qualifications and the post was filled by promotion from the department.

SRI A. V. P. ASAITHAMBI: அரசாங்கத்தில் ஊழியம் பார்ப்பதாக இருந்தால் அவர் எந்த அரசியல் கட்சியிலும் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. மாநில விளம்பர அதிகாரியாக இருப்பவர் காங்கிரஸ் கட்சியின் சார்பாக மேல்சபைக்கு அபேட்சா பத்திரம் தாக்கல் செய்தார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? உத்யோகத்திற்கு வந்தபிறகு அவர் அந்தக் கட்சியை விட்டு விட்டாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தக் கேள்வி இதில் எழவில்லை. ஆனால் இது ஒரு முக்கியமான கேள்வியாக இருப்பதால் அதற்கு பதில் சொல்கிறேன். யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அரசாங்க உத்யோகத்திற்கு வந்தவுடன் அவர் அரசியல் கட்சியிலிருந்து விலகி விடவேண்டும் என்று விதி இருக்கிறது. அதன்படியே அவரும் விலகி இருக்கிறார்.

SRI K. VINAYAKAM: May I know on what grounds this incumbent was found unfit to hold the post of Public Relations Officer by the Public Service Commission? Does he possess all the qualifications to warrant his appointment to this office?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not know on what grounds the Public Service Commission found him wanting. As a matter of fact, for this post of Public Relations Officer, there were about 19 applications and some of the applicants were interviewed, but none of them were found fit. Therefore, I really cannot say on what basis the Public Service Commission came to that conclusion.

* 4 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to appoint Publicity Officers to districts where there are no such officers at present?

THE HON. SRI C. SUBRAMANIAM: No.

SRI M. KALYANASUNDARAM: ஜில்லா விளம்பர அதிகாரிகளுக்கு என்ன தகுதிகள் வேண்டும் என்று நிர்ணயித்து இருக்கிறார்கள், அந்தப் பதவிக்கு நியமனம் செய்வதை ஏன் சர்விஸ் கமிஷனுக்கு விடக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: போன கேள்வியிலேயே இதைப்பற்றி சொல்லபப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டியது

(1) A University Degree.

(2) Three years of journalistic experience.

(3) Age not more than 45 and not below 25 years at the time of appointment.

இந்தத் தகுதிகளை வைத்துக்கொண்டு அவர்களை தேர்ந்தெடுக்கிறோம். எல்லாவற்றையும் சர்விஸ் கமிஷனுக்கு விட வேண்டுமென்பதில்லை. முக்கியமான தனிப்பட்ட முறையில் நியமிக்க வேண்டிய காரணமாக இருப்பதால் இதை சர்க்காரே கவனித்துக்கொண்டது. அந்தக் காரணத்தினால் தான் அவரை நியமித்து வைத்துக்கொண்டிருக்கிறோம்.

Sri M. KALYANASUNDARAM : இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மற்ற உத்யோகஸ்தர்களைப்போல் நிரந்தரமாக சர்க்கார் உத்யோகத்தில் இருப்பதற்கு வசதி உண்டா, மற்ற சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகள் இவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி நியமனம் செய்வது ஒரு கால அளவுக்குத்தான். அவர்கள் சரிவர பணியாற்றி வந்தால் அவரையே தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் அவரை வேறு டிபார்ட்மெண்டிலிருந்து எடுத்துக்கொண்டிருந்தால் அந்த டிபார்ட்மெண்டிற்கே திருப்பி அனுப்பி விடலாம், அல்லது வெளியிலிருந்து எடுத்துக்கொண்டிருந்தால் வெளியிலேயே அனுப்பி விடலாம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Where is the need for these officers? Do the Government honestly believe that there is need for such officers in the districts?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not understand the words ' honestly believe '; I do believe that publicity is necessary, particularly in the context of the Plan and its implementation. It is absolutely necessary to get the co-operation of the people to the largest extent possible and for that publicity is necessary. We are not functioning in a Police State.

Sri A. A. RASHEED : Are the qualifications the same for the Public Relations Officers and the District Publicity Officers?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, they are slightly different.

Sri V. SANKARAN : எந்தெந்த மாவட்டங்களில் இன்னும் விளம்பர அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது கோயம்புத்தூர், சேலம். தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி ஆகிய ஜில்லாக்களில் இருக்கிறார்கள். இதர இடங்களில் இல்லை.

Sri A. GOVINDASAMY : இத்தகைய பொறுப்புள்ள உத்தியோகங்களுக்கு சர்விஸ் கமிஷன் மூலமாக நியமனம் செய்யப்படுவதில்லை. வேண்டியவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதற்குத் தடை ஏற்படக்கூடாது என்பதற்காக சர்விஸ் கமிஷன் மூலமாக நியமனம் செய்யப்படவேண்டாம் என்று அரசாங்கம் கருதுகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வேண்டியவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதற்காக இந்த உத்தியோகம் இல்லை. தகுதியுள்ளவர்கள், அதிலும் பிரசாரம் செய்வதற்குத் தகுதி உள்ளவர்களைத்தான் இந்த உத்தியோகத்தில் நியமிக்க முடியும். இது மாதிரி வேலைகளுக்கு நியமனம் செய்வதை பப்ளிக் சர்விஸ் கமிஷனிடம் விடும்பொழுது இந்த டிகிரி இருக்கவேண்டும் என்று கூறுவார்கள். ஆனால் அவர்களுக்கு உண்மையாகவே பிரசாரத் தகுதி இருக்கிறதா என்பதை அவர்களால் பரிசீலிக்கமுடியாது. ஆகவே பிரசாரத்தில் தகுதி இருக்கிறதா என்பதை

ஆராயவேண்டுமானால் பப்ளிசிடி டிபார்ட்மெண்ட் மூலமாக நல்ல முறையிலே அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும் என்ற காரணத்தினால்தான் இதை சர்க்காரே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

Sri M. KALYANASUNDARAM : இப்பொழுது இருக்கும் ஜில்லா விளம்பர அதிகாரிகளில் எத்தனை பேர் நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் ? அவர்களில் எவ்வளவு பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ? மற்றக் கட்சிகளில் இருந்து வேறு யாராவது எடுக்கப்பட்டிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் எத்தனை பேர் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

Appointment of persons belonging to certain political parties

* 5 Q.—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have given any directions to the Public Service Commission not to recruit persons who belong to certain political parties for Government appointments; and

(*b*) if so, the names of those political parties?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Certainly not, Sir.

(*b*) Does not arise.

Sri A. GOVINDASAMY : கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒரு அம்மையார் கெஜட் பதிவுள்ள உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கம்யூனிஸ்டு கட்சியில் முன்பு சேர்ந்து இருந்திருக்கலாம். சர்க்கார் உத்தியோகத்துக்கு வந்த பிறகு அரசியல் கட்சிகளில் ஈடுபட்டிருக்கக்கூடாது. ஈடுபட்டிருந்தால். அதை பற்றிக்கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

Sri N. K. PALANISAMI : சர்விஸ் கமிஷன் ஒரு autonomous body-யாக இருப்பதனால், முற்போக்குக் கொள்கையுடையவர்களை தேர்ந்தெடுக்காமல் விட்டுவிடக்கூடாது என்பது இந்தச் சபையினுடைய அபிப்பிராயம் என்று சிபாரிசு செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தச் சபையினுடைய அபிப்பிராயத்தைப் பற்றிச் சொல்லமுடியாது. முற்போக்குக் கொள்கை என்று சொல்லப்படுகிறவர்களுடைய கொள்கைகூட பிற்போக்குக் கொள்கையாக இருக்கிறது.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, மற்றக் கட்சிகளில் தொடர்பு கொண்டிருப்பவர்களைக்கூட அரசாங்கப் பதவிகளில் நியமிப்பதன் மூலம் அவர்களுடைய எதிர்ப்புச் சக்தியை மழுங்க வைத்துவிடலாம் என்பதை அரசாங்கம் ஒரு ராஜதந்திரமாகக் கருதிக் கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

Rent Control Act

* 6 Q.—**Sri V. K. KOTHANDARAMAN** ! கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் எந்தெந்த பிரதேசங்களில் சென்னை நகர பகுதி மனைக்குடி இருப்போர் பாதுகாப்புச் சட்டம் அமுலில் உள்ளது?